# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
# குழித்துறை நகராட்சி

**குழித்துறை நகர் மன்றத்தின் 23–02–2017 ம் தேதி வியாழக்கிழமை நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானங்கள்**

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வாவுபலி சந்தையில் 2012–2013–ம் ஆண்டில் ஸ்டால் அமைக்கும் பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட டெண்டர் முன்வைப்புத்தொகை ரூ.2500/– மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.2500/– ஒப்பந்ததாரர் திரு.பி. தேவராஜனுக்கு திருப்பி வழஙகப்பட வேண்டியுள்ளது. இப்பணி நடைபெற்று மூன்றாண்டுகளுக்கு மேலாகியுள்ளதால் மேற்படி தொகைகளை திருப்பி வழஙகிட மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 2812,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 2

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அட்டைக்குளத்தினை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக திரு. பிரான்சிஸ் என்பவர் Application No.116/2016–ன்படி நகராட்சி ஆணையாளரை மூன்றாம் பிரதிவாதியாக்கி தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை திரு.கே. வாமனன் வழக்கறிஞர் இந்நகராட்சி சார்பாக நடத்தவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 2813,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 3

குழித்துறை நகராட்சி பகுதியில் ஒப்பந்ததாரர் திரு.கே. டேவிட் என்பவரால் 2012–2013–ம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்ட கீழ்காணும் பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட EMD மற்றும் FSD தொகைகளை திருப்பி வழஙகிட மன்றம் தீர்மானிக்கிறது.

| வரிசை எண் | பணியின் பெயர் | வழஙகப்பட வேண்டிய தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | திருத்துவபுரம் ஆர்.சி.சர்ச் பின்புறம் உள்ள சாலை கருந்தளம் அமைத்தல் | EMD ரூ.4,000<br>FSD ரூ.4,000 |
| 2 | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நூலகம் கட்டும் பணி | EMD ரூ.10,000<br>FSD ரூ.10,000 |
| 3 | உண்டனாகுழி பெருஙகுளத்தில் சப்பாத் சீரமைக்கும் பணி செய்தல் | EMD ரூ.2,000<br>FSD ரூ.2,000 |

**<u>நகர்மன்றத் தீர்மான எண். 2814,</u>**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சியில் ஒப்பந்ததாரர் திரு.A. ஆன்றணி (கண்ணக்கோடு) என்பவரால் 2012–2013–ம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்டுள்ள கீழ்காணும் பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட கீழ்கண்ட தொகைகளை திருப்பி வழஙகிட மன்றம் தீர்மானிக்கிறது.

| வரிசை எண் | பணியின் பெயர் | வழஙகப்பட வேண்டிய தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் குடிநீர் குழாய் வருடாந்திர பராமரிப்பு செய்தல் | EMD ரூ.3,250<br>FSD ரூ.3,250 |
| 2 | காஞ்சினி கடவு சாலை சிமெண்டு கான்கிரீட் தளம் அமைத்தல் | EMD ரூ.4,000<br>FSD ரூ.4,000 |
| 3 | காஞ்சினி கடவு சாலையில் தடுப்பு சுவர் அமைத்தல் | EMD ரூ.1,250<br>FSD ரூ.1,250 |
| 4 | காஞ்சினி கடவு சாலை சிமெண்டு கான்கிரீட் தளம் அமைத்தல் | EMD ரூ.1,200<br>FSD ரூ.1,200 |

**<u>நகர்மன்றத் தீர்மான எண். 2815,</u>**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 5

குழித்துறை நகராட்சி அலுவலக பயன்பாட்டிலுள்ள Muratec Xerox இயந்திரத்திற்கு உபயோகப்படுத்தப்படும் டோனர்கள் இருப்பில் இல்லாததால் 7 எண்ணம் டோனர்கள் உள்ளூர் விலைப்புள்ளி கோரி வாஙகுவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.25,000/– வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 2816,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 6

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திலுள்ள புதிய கடைகள் மற்றும் இருசக்கர வாகன காப்பகம் மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி விளம்பர அறிக்கையினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் 19–11–2016–ல் பத்திரிகையில் விளம்பரம் செய்த வகைக்கு மக்கள் குறல் பத்திரிகையில் ரூ.28,200/–ஐ வழஙக மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 2817,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 7

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திலுள்ள A பிளாக் மற்றும் B பிளாக் கடைகள் இருசக்கரவாகன காப்பகம், பேருந்து நிலைய கழிப்பறை ஆகிய இனஙகளுக்கு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர வைப்புத்தொகை மற்றும் சொத்து மதிப்பு அளிக்காதவர்கள் கூடுதல் வைப்புத் தொகையாக ஒவ்வொரு இனத்திற்கு செலுத்த ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது கீழ்கண்ட இனஙகளுக்கு மொத்த தொகையும் வைப்புத் தொகையாக செலுத்த மன்றம் தீர்மானிக்கிறது.

| வ. எண். | குத்தகை இனம் | வைப்புத்தொகை ரூபாய் | மின் இணைப்பு வைப்புத்தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1) | மார்த்தாண்டம் பேருந்து நிலைய மற்றும் பி. பிளாக் கடைகள் | 75000 | 25000 |
| 2) | மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திலுள்ள இருசக்கர வாகன காப்பகம் | 75000 | 5000 |

3) மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திலுள்ள கட்டண கழிப்பறை 1.50 லட்சம் 5000

**நகர்மன்றத் தீர்மான எண். 2818,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 8

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலைய கட்டண கழிப்பறை 3/2017—ல் மூன்று வருட குத்தகை காலம் முடிவடைவதால் மீண்டும் நகராட்சி பொது நிபந்தனைக்குட்பட்டு 2017—2018 முதல் 2019—2010 வரை மூன்று வருட காலத்திற்கு பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடவும், பத்திரிகையில் விளம்பரம் செய்யவும் அதற்கான விளம்பர தொகையினை பொது நிதியில் செலவிட மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 2819,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 9

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் காய்கறி சந்தைக்குள் அமைந்திருக்கும் IDSMT கடை எண்.14, 15, 16, 17, 18, 20, 21, 22, 23 ஆகிய 9 கடைகளின் குத்தகைதாரர் திரு. சகாயதாஸ் என்பவர் நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். WP(MD) No.24610 of 2016 மற்றும் WMP(MD) No.17741 of 2016—ல் நகராட்சியின் சார்பாக ஆஜராகவும் வழக்கிற்கான இந்த வழக்கினை எடுத்து நடத்த திரு. வாமனன் மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞரிடம் ஒப்படைத்துள்ளதால் அன்னாருக்கு வழஙக வேண்டிய வழக்கு கட்டணத்திற்கான தொகையினை வழஙகிட மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 2820,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 10

குழித்துறை நகராட்சியில் வரிவசூல் பணிக்கு பழைய 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுக்கள் பெற்றுக் கொள்ளப்படும் என்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட ஆட்டோ மூலம் விளம்பரம் செய்யவும் பேனர்கள் தயார் செய்த வகைக்கும் ஆகும் செலவினத்தொகை ரூ.18,750/—க்கு மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 2821,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 11

குழித்துறை நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணியாற்றி 24–01–2001 அன்று பணி நீக்கம் செய்யப்பட்ட திரு. தங்கன் என்பவரது ஓய்வூதிய பலன்கள் வழஙகக்கோரிய திருமதி. அன்னம்மாள் என்பவர் நகராட்சி ஆணையரை நான்காம் பிரதியாக்கி சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக்கிளையில் W.P.(MD)No.21329 of 2016–ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு ஆணையாளர் சார்பில் ஆஜராக சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக்கிளை கூடுதல் வழக்கறிஞர் திரு. முத்துக்கருப்பன் வசம் வழக்கினை ஒப்படைக்கவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 2822,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 12

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வைசிராய் சாலை மற்றும் ஊற்றஙகரை பகுதிகளுக்கு குடிநீர் வினியோகம் செய்யும் குடிநீர் வினியோக குழாய்களில் அடைப்பு ஏற்பட்டுள்ளதால் பொது மக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்ய இயலாத நிலையிலுள்ளதால் குடிநீரின் அவசியம் கருதி புதிதாக 90 mm PVC Pipe line அமைப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.1.50 லட்சம் ஆகும். மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 2823,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 13

குழித்துறை நகராட்சி பகுதிகளிலுள்ள 21 வார்டுகளிலும் குடிநீர் விநியோக குழாய்கள் மற்றும் பிரதான குழாய்கள், சுலீஸ் வால்வுகள் மற்றும் பொதுக்குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து பொது மக்களுக்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்வதற்கு ரூ.3,00,000/– உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை குடிநீர் நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 2824,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 14

குழித்துறை நகராட்சி பகுதியில் வறட்சியினை எதிர்நோக்கி வறட்சியை சமாளிக்கும் பொருட்டு கீழ்காணும் குடிநீர் திட்டப்பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வரிசை எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.20 முத்தாரவிளையில் ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின் விசை அமைத்தல் | 2.00 |
| 2 | வார்டு எண்.9 செக்காலத்தெருவில் ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின் விசை அமைத்தல் | 2.00 |
| 3 | வார்டு எண்.5 வி.எல்.சி. மைதானத்தில் ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின் விசை அமைத்தல் | 2.00 |
| 4 | வார்டு எண்.21 சிறியகாட்டுவிளையில் ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின் விசை அமைத்தல் | 2.00 |

மேற்படி பணிகளை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் செயல்படுத்த மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 2825,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 15

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN75L.0828-ன் கீழ்காணும் பழுதுகள் சரி செய்யப்பட வேண்டியுள்ளது.

1) Engine Oil, Oil Filter Change
2) Diesel Filter change
3) Water Wash
4) Electrical Checkup
5) General Checkup

மேற்படி பணிகள் செய்திட உத்தேச மதிப்பீடு ரூ.5,600/– நகராட்சி வருவாய் நிதியில் செலவிட மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 2826,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 16

குழித்துறை நகராட்சியில் Centrolized Web Based Saftward விரைவில் நடைமுறைபடுத்த உள்ளதால், அலுவலகத்திலுள்ள ஒவ்வொரு பிரிவிற்கும் இருக்கை வாரியாக கணினிகள் மற்றும் Printer-கள் தேவைப்படுகிறது. எனவே கீழ்கண்ட விபரப்படி கணினிகள் மற்றும் Printer-கள் வாஙகுவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.6,80,000/–ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

1) Computer (4 GB Ram) - 10 Nos.
2) Lap Top - 1 No.
3) Dotmatrix Printer - 2 Nos.
4) Laser Printer - 3 Nos.
5) Scan With Laser printer - 6 Nos.

மேற்கண்ட கணனிகள் மற்றும் Printer-கள் DGS & D விலை விகிதத்தில், நிர்வாக நலன்கருதி வாஙகுவதற்கும் Instalation, Elecrification மற்றும் Computer Table and Chair வாஙகவும் அதற்கான செலவினம் மொத்தம் ரூ.6,80,000/– வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் தீர்மானிக்கிறது.

**<u>நகர்மன்றத் தீர்மான எண். 2827,</u>**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 17</u>

குழித்துறை நகராட்சியில் வருவாய் நிதியின்கீழ், கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 17–02–2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தவிகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1 | வார்டு எண்.9 Old MS சாலையில் அமைந்துள்ள நூலகத்திற்கு Rack தளக்கல் பதித்தல், மின் இணைப்பு பணிகள் செய்தல் அமைத்தல் | 2.00 | 1) திரு.கே. டேவிட்<br>2)திரு.பி. ஜெயக்குமார் | –<br>0.04% | 0.02%<br>- |
| 2 | மார்த்தாண்டம் புதிய பேருந்து நிலையத்தினுள் உயர்கோபுர மின்விளக்கு நிறுவிட அடிதளம் மற்றும் நிறுவும் பணி செய்தல் | 1.50 | 1) திரு.டி. ஜஸ்டின்குமார்<br>2) திரு.டி. பிறேம்குமார் | –<br>1.60% | 0.12%<br>- |
| 3 | நகராட்சிக்கு சொந்தமான கணனிகளை வருடாந்திர பராமரிப்பு செய்தல் | 0.57 | 1) M/S. Micronet System<br>2) M/S. Microstuff computers | –<br>1.75% | 0.09%<br>- |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.(1) திரு.கே. டேவிட், வரிசை எண்.(2) திரு.டி. ஜஸ்டின்குமார், வரிசை எண்.(3) M/S. Micronet System ஆகியோரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்க தீர்மானிக்கிறது.

**<u>நகர்மன்றத் தீர்மான எண். 2828,</u>**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 18</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலைய A Block கடை எண்.2–ஐ திரு.E. விஜயகுமார் என்பவர் 1–3–2014–ல் குத்தகைக்கு எடுத்து மூன்று வருட காலம் கடை நடத்தி வந்தனர். தற்போது 3–2–2017–ம் தேதிய விண்ணபத்தில் தனது உடல்நிலை

சரியில்லாத காரணத்தினால் தொடர்ந்து கடை நடத்த இயலாது என தெரிவித்து அன்னார் செலுத்திய வைப்புத் தொகையினை திருப்பி கேட்டுள்ளார். குத்தகை காலம் மூன்று வருடம் ஆகையால் கடை தொடர்ந்து நடத்த இயலாது என தெரிவித்து விண்ணப்பம் கொடுத்துள்ளதால் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்படாத வண்ணம் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:– மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**<u>நகர்மன்றத் தீர்மான எண். 2829,</u>**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 19</u>

குழித்துறை நகராட்சியில் மையப்படுத்தப்பட்ட மின் ஆளுமை மென்பொருள் நிறுவப்பட இருப்பதால் (Web Based Software) அதற்குரிய வரி மற்றும் வரியில்லா இனஙகளுக்கான கணினி ரசீதுகள் வாங்க வேண்டியுள்ளது. அதனை அரசு கூட்டுறவு அச்சகத்திலிருந்து வாஙகிடவும் ஏற்படும் செலவினஙகளை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. :– மன்றம் தீர்மானிக்கிறது.
ந.க.எண்.408/2011/அ1.

**<u>நகர்மன்றத் தீர்மான எண். 2830,</u>**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 20</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட நகர புல எண். A2/129–ல் திரு. இராமமூர்த்தி என்பவரால் கட்டப்பட்ட மதில் சுவர் தொடர்பாக திரு.சி. மோகன் என்பவர் WP(MD)No.4058/12–ன்படி நகராட்சி ஆணையர், மாவட்ட ஆட்சியர், தாசில்தார் மற்றும் இராமமூர்த்தி மீது வழக்கு தொடர்ந்து தீர்ப்பு பெற்றுள்ளார். தற்போது C. மோகன் என்பவர் மேற்படி தீர்ப்பின்மீது WP(MD)No.1630/2016–ன்படி Contempt pettition பதிவு செய்துள்ளார். எனவே திரு. வாமனன், உயர்நீதி மன்ற வழக்கறிஞர், மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் ஆஜராகி வக்காலத்து தாக்கல் செய்துள்ளார். எனவே வழக்கறிஞர் கட்டணமாக ரூ.10,000/– கேட்டு கடிதம் வரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/– நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙக மன்றம் தீர்மானிக்கிறது.
File No.178/2012/TPI.

**<u>நகர்மன்றத் தீர்மான எண். 2831,</u>**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 21

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் TN.74W.0236–க்கு 2016–2017–ம் ஆண்டிற்கான தகுதிச்சான்று பெறுவதற்கு வேகக்கட்டுப்பாட்டு கருவி பொருத்திய வகைக்கு கூடுதல் செலவினம் ரூ.3500/– வருவாய் நிதியிலிருந்து M/S. கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ்–க்கு வழஙகிட மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 2832,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 22

**திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016**

சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)ல் பிரிவு 3, 6 மற்றும் 25களில் வழஙகப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசு திடக்கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ஐ இயற்றியுள்ளது. இந்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 அனைத்து நகராட்சிகளுக்கும் பொருந்தும். ஒவ்வொரு நகராட்சியும் தனது அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் நகராட்சி கழிவுகளை சேகரித்தல், சேமித்தல், தரம்பிரித்தல், எடுத்துச்செல்லுதல், செயலாக்கம் மற்றும் இறுதியாக்கம் செய்தல் போன்ற பணிக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ல் குறிப்பிட்டுள்ளவாறு கழிவுகளை உருவாக்குபவர் அந்தந்த நகராட்சி நிர்வாகத்துடன் ஒருஙகிணைந்து கழிவுகளை கண்ட இடஙகளில் கொட்டாமல் தவிர்க்கவும், கழிவுகளை தரம்பிரித்து நகராட்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள முறைப்படி அப்புறப்படுத்தவும் பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**குழித்துறை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள்,தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306ன் கீழ் இயற்றப்பட்டது.**

குழித்துறை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி தனிநபர் குடியிருப்பு, வணிக வளாகஙகள், உணவு விடுதிகள், சிற்றுண்டி சாலை, மருத்துவமனைகள், மொத்த வணிகர்கள், சில்லரை வணிகர்கள் மற்றும் அனைத்து வணிகர்கள் உட்பட அனைவரும் குழித்துறை நகராட்சியை தூய்மையான நகராட்சி பகுதியாக்க திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி திடக்கழிவுகளை மேலாண்மை செய்தல் முறைப்படுத்தப்பட்டு உள்ளது. இதன்படி நகராட்சி திடக்கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016ன் அட்டவணை 11 வரிசை எண்.1(3)ன்படி கழிவை உருவாக்குபவர் அதனை குப்பையாக வெளியே போடுவதை தவிர்க்கும் பொறுப்புடையவராவர் அவர் அதிகார அமைப்பினால் அறிவிக்கப்பட்ட சேகரித்தல் மற்றும் பிரித்தல் முறைக்கு இணஙகி கழிவை ஒப்படைப்பு செய்ய உறுதி செய்ய வேண்டியவராவார்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அத்தியாயம் VIII பிரிவு 153, 156, 157, 158, 160 மற்றும் 161ன்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவுகளை அகற்ற போதிய ஏற்பாடுகள் செய்யவும், திடக்கழிவு சேவையில் ஈடுபட்டு பொது சுகாதாரம் பேணி சுற்றுச்சுழலை பாதுகாக்கும் செலவினத்தை அதன் பொறுப்பாளர்களிடம் இருந்து பணம் வசூலித்து செயல்படுத்தவும் நச்சுத் தன்மை உடைய கழிவுகளையோ, அழுகிய கழிவுகளையோ, மலக்கழிவுகளையோ, மருத்துவக்கழிவுகளையோ மாற்றம் செய்தல், சாலைகளில் போடுதல் மற்றும் வடிகால்வாய்களில் கொட்டுதல் ஆகியவை தடை செய்யப்படுகிறது. மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை மற்றும் அபராதம் விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் சுத்தமாகவும், வடிகால்வாய் தங்கு தடையின்றி செயல்படவும், நிலத்தடி நீர் மற்றும் சுற்றுப்புற காற்றின் தரம் ஆகியவை மாசுபடுவதை தவிர்க்கவும், பொது சுகாதாரம் பாதுகாக்கவும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி நகர்மன்றம் ஆணையாளருக்கு திடக்கழிவு மேலாண்மை திட்ட செயல்பாட்டிற்கு தனிநபர் குடியிருப்புகள் மற்றும் வணிகர்களிடம் இருந்து திடக்கழிவு மேலாண்மை கட்டணம் வசூலிக்கவும் துணை விதிகளின்படி நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் வழஙகப்படுகிறது.

குழித்துறை நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகள், தெருக்கள், சந்துக்கள், கடைவீதிகள், குடியிருப்புகள், தொகுப்பு வீடுகள், உணவகஙகள், அலுவலகஙகள், வணிகவளாகஙகள் மற்றும் இதர பிற இடஙகளில் வசிக்கும் மக்கள் திடக்கழிவுகளை தெருக்களிலோ, சாலை ஓரஙகளிலோ, சந்துக்களிலோ, கழிவு நீர்க்கால்வாய்களிலோ, பொது இடஙகளிலோ மற்றும் நீர்நிலைகளிலோ போடக்கூடாது என்று தடைவிதிக்கப்படுகிறது.

மக்கள் வசிக்கும் மற்றும் கூடும் இடஙகளில் உருவாகும் குப்பைகளை மக்கும் தன்மை உள்ளவற்றினை தனியாகவும் மக்காத தன்மை உள்ளவற்றினை தனியாகவும் சேகரம் செய்யப்பட வேண்டும். மக்கும் தன்மையுள்ள குப்பைகளை பச்சை நிறக் கூடையிலும், மக்காத தன்மையுள்ள குப்பைகளை சிவப்பு நிறமுள்ள கூடையிலும் சேகரம் செய்யப்பட்ட வேண்டும். இது வீடு அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும். கூடைகள் சொந்த செலவில் வாஙகி உபயோகிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு தரம் பிரித்து சேகரம் செய்யப்பட்ட குப்பைகளை நகராட்சி வாகனம் ஒவ்வொரு வீட்டிற்கும் குறிப்பிட்ட நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளும், தனித்தனியாக பிரிக்கப்பட்ட இந்த குப்பைகளை நகராட்சி வாகனத்தின் பொறுப்பாளரிடம் நேரில் ஒப்படைப்பது வீட்டின் அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும். பிரிக்கப்படாத குப்பைகளை கண்டிப்பாக வாஙகப்பட மாட்டாது.

சுகாதாரக்கழிவுகளான டயப்பர்,நாப்கின்கள் ஆகியவற்றினை உற்பத்தியாளர்களால் அதனுடன் வழங்கப்படுகின்ற உறையினுள்ளோ அல்லது பொருத்தமான பொருளால் சுற்றியோ மட்டுமே வழங்கப்படவேண்டும்

அடுக்குமாடி குடியிருப்புகள், தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் இதர ஒன்றுக்கு மேற்பட்ட குடியிருப்புகள் உள்ள பகுதியில் உள்ள வீடுகளது அல்லது நிறுவனஙகளது உரிமையாளர் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் நகராட்சியின் வாகனம் வரும்போது அவை நிறுத்தப்பட்டிருக்கும் இடத்தில் நேரில் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும். நகராட்சி பணியாளர்களால் மாடி ஏறி வந்து குப்பை பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

மீன், கோழி, ஆடு போன்ற இறைச்சி கடை நடத்துபவர்கள் கழிவுகளை தெருக்களிலோ அல்லது திறந்த வெளியிடஙகளிலோ அல்லது கழிவு நீர்க் கால்வாய்களிலோ போடக்கூடாது. அவைகளை கசிவு ஏற்படாத வகையில் பொட்டலஙகளாக்கி நகராட்சியின் வாகனத்தில் ஒப்படைக்க வேண்டும். இதற்காக பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தக்கூடாது.

மருத்துவமனை கழிவுகள், நோய் கிருமி சோதனை செய்யும் கூடஙகள் மற்றும் கால்நடை மருத்துவ கழிவுகளை எக்காரணம் கொண்டும், குப்பைகளில் சேர்க்க கூடாது. உயிரி மருத்துவ கழிவு மேலாண்மை விதிகள் 2016ல் கூறியுள்ளவாறு மருத்துவமனைகள் மற்றும் சோதனைச் சாலைகள் தஙகளது சொந்த பொறுப்பில் உரிய முறையில் அகற்றி அழித்தல் வேண்டும். உயிரி மருத்துவ

கழிவுகளை நகராட்சி பகுதியில் கொட்டுதல், புதைத்தல் மற்றும் எரித்தல் ஆகியவை தண்டனைக்குரிய குற்றமாகும்.

தோட்டக்கழிவுகள், பால்பண்ணை கழிவுகள் ஆகியவற்றை உருவாக்குவோர் உரிமையாளர் அவற்றை தம் சொந்த பொறுப்பில் அப்புறப்படுத்த வேண்டும். நகராட்சி சாலை ஓரங்கள் மற்றும் பொது இடஙகளில் கொட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

கட்டட இடிபாடுகளை கட்டட உரிமையாளர் ஒப்பந்தக்காரர்கள் சாலைகளிலோ, தெருக்களிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அவைகளை சம்பந்தப்பட்டவர்கள் தங்களது சொந்த பொறுப்பில் அகற்றிக்கொள்ள வேண்டும் அல்லது உரிய பயன்படுத்துவோர் கட்டணம் செலுத்தினால் நகராட்சி தனது வாகனம் மூலம் அவற்றை அப்புறப்படுத்தும்.

நகராட்சி எல்லைக்குள் பிளாஸ்டிக், ரப்பர், டயர் உள்ளிட்ட திடக்கழிவுகள் எவற்றையும் எரிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

நூற்றுக்கும் மேற்பட்ட நபர்கள் கூடும் நிகழ்ச்சி மேற்கொள்ள 3 வேலை நாட்களுக்கு முன்னதாக நிகழ்ச்சி அமைப்பாளர் நகராட்சியில் அனுமதி பெறவேண்டும்.மேலும் நிகழ்ச்சியின் போது உருவாகும் குப்பைகளினை சம்பந்தப்பட்டவர்கள் தங்களது சொந்த பொறுப்பில் அகற்றிக்கொள்ள வேண்டும் அல்லது உரிய பயன்படுத்துவோர் கட்டணம் செலுத்தினால் நகராட்சி தனது வாகனம் மூலம் அவற்றை அப்புறப்படுத்தும்.

திருமண மண்டபஙகள், கோவில், சர்ச், மசூதிகள், சத்திரம் ஆகியவற்றில் நடைபெறும் திருமணம் மற்றும் இதர விசேஷஙகளின் போது உருவாகும் கழிவுகளை தெருக்களிலோ, சாலைகளிலோ, கழிவு நீர் வாய்க்கால்களிலோ அல்லது வேறு எந்த பகுதிகளிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். இவற்றை தமது சொந்த பொறுப்பில் வாகனம் மூலம் நகராட்சி உரக்கிடஙகில் ஒப்படைக்க வேண்டும் அல்லது உரிய பயன்படுத்துவோர் கட்டணம் செலுத்தினால் நகராட்சி வாகனமே இவற்றினை பெற்றுக் கொள்ளும்.

5000 சமீ மேல் பரப்பளவு கொண்ட குடியிருப்புவளாகங்கள் மற்றும் நிறுவனங்கள் மக்காதகுப்பைகளினை தனியே பிரித்து தங்கள் வளாகத்திற்குள்ளேயே நகராட்சியின் வழிகாட்டுதலின் படி உரமாக்கவோ அல்லது உயிரிவாயு உற்பத்தி செய்யவோ வேண்டும்.மக்காத குப்பைகளினை தனியாக நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட குப்பை பொறுக்குபவர்களிடமோ அல்லது மறுசுழற்சி செய்பவர்களிடமோ ஒப்படைக்கவேண்டும்.

உணவு விடுதிகள்,தேநீர் விடுதிகள், தள்ளுவண்டியிலுள்ள உணவுப் பொருள் விற்பனை நிலையஙகள், இரவு நேரக்கடைகள்,காய்கறி மொத்த விற்பனை நிலையம், மார்க்கெட் ஆகியவற்றில் உருவாகும் குப்பைகளை தெருக்களிலோ சாலைகளிலோ,அல்லது நகராட்சியின் எந்த ஒரு பகுதியிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். உரிய பயன்படுத்துவோர் கட்டணம் செலுத்தினால் நகராட்சி வாகனமே இவற்றினை பெற்றுக் கொள்ளும்.

அச்சகஙகள்,தொழிற்சாலைகள் ரசாயன மருந்து கையாளும் தொழிற்சாலை மற்றும் இதில் குறிப்பிடாத இதர அனைத்து வணிக மற்றும் தொழில் நிறுவனஙகளில் ஏற்படும் குப்பை கழிவுகளை நகராட்சி எல்லைக்குள் கொட்டக்கூடாது.

தோல்பதனிடும் தொழிற்சாலைக் கழிவுகளை நகராட்சி பகுதியில் விடக்கூடாது.கழிவுகளை அப்புறப்படுத்த மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் வகுத்துள்ள விதிமுறைகளின் படி அப்புறப்படுத்த வேண்டும்.

பாதசாரிகள் மற்றும் சாலை ஓரங்களிலும் இதர இடங்களிலும் குடியிருப்போர் நகராட்சி சாலை ஓரங்களில் மற்றும் திறந்தவெளியில் மலம் மற்றும் சிறுநீர் கழித்தல் கூடாது.

செப்டிக் டேங்க் கழிவுகளை கழிவுநீர் வாய்க்கால்களிலோ,அல்லது தெருக்களிலோ கொட்டக்கூடாது. அவ்வாறு கொட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

நகராட்சியின் வாகனம் மூலம் குப்பை கழிவுகளை அப்புறப்படுத்த பயன்படுத்துவோர் கட்டணங்கள் பின்வருமாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

| வ.எண். | பொருள் | காலம் | கட்டணம் ரூபாய் |
|---|---|---|---|
| | **1.குடியிருப்பு** | | |
| அ. | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.500க்குள்) | மாதம் ஒன்றிற்கு | 20.00 |
| ஆ. | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.501–1000க்குள்) | மாதம் ஒன்றிற்கு | 30.00 |
| இ. | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.1001–2000க்குள்) | மாதம் ஒன்றிற்கு | 50.00 |
| ஈ. | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.2001க்கு மேல்) | மாதம் ஒன்றிற்கு | 100.00 |
| | **2.நிறுவனம்** | | |
| அ. | தனியார் பள்ளி,கல்லூரி விடுதி தனியார் அலுவலக வளாகம் | மாதம் ஒன்றிற்கு | 500.00 |
| ஆ. | மருத்துவமனை (படுக்கையுடன்) | மாதம் ஒன்றிற்கு | 500.00 |
| இ. | கிளினிக் | மாதம் ஒன்றிற்கு | 500.00 |
| | **3.வணிகம்** | | |
| அ. | டீ ஸ்டால்/சிற்றுண்டி | மாதம் ஒன்றிற்கு | 100.00 |
| ஆ. | நடமாடும் உணவகம் | தினமும் | 10.00 |
| இ. | உணவகம் சிறியது | மாதம் ஒன்றிற்கு | 500.00 |
| ஈ. | உணவகம் பெரியது | மாதம் ஒன்றிற்கு | 1000.00 |
| உ. | வணிக வளாகம் | மாதம் ஒன்றிற்கு | 1000.00 |
| ஊ. | திருமண மண்டபம் சிறியது | நிகழ்வு ஒன்றுக்கு | 500.00 |
| எ. | திருமண மண்டபம் பெரியது | நிகழ்வு ஒன்றுக்கு | 1000.00 |
| ஏ. | தையல் கடை | மாதம் ஒன்றிற்கு | 100.00 |
| ஐ. | இருசக்கர வாகன பழுது நீக்கும் கடை | மாதம் ஒன்றிற்கு | 100.00 |
| ஒ. | மோட்டார் வாகனம் பழுது பார்க்கும் கடை | மாதம் ஒன்றிற்கு | 200.00 |
| ஓ. | தேஙகாய்/பூ/பழம்/காய்கறிகள் வியாபாரம் | மாதம் ஒன்றிற்கு | 100.00 |
| ஔ | பலசரக்கு/ஸ்டேஷனரி/மருந்தகம் | மாதம் ஒன்றிற்கு | 300.00 |
| | **4.மற்றவை** | | |
| அ. | மட்டன்/சிக்கன்/மீன் ஸ்டால் | மாதம் ஒன்றிற்கு | 300.00 |
| ஆ. | சினிமா தியேட்டர் | மாதம் ஒன்றிற்கு | 1000.00 |
| இ. | ஜவுளி கடை வியாபாரம் | மாதம் ஒன்றிற்கு | 500.00 |
| ஈ. | தோல் பை விற்பனை, தயார் செய்தல்,காலணி விற்பனை | மாதம் ஒன்றிற்கு | 100.00 |

| | | | |
|---|---|---|---|
| உ. | மரக்கழிவுகள் | ஒரு லாரி அளவுக்கு | 1000.00 |
| ஊ. | தோட்டக்கழிவுகள் | ஒரு லாரி அளவுக்கு | 1000.00 |
| எ. | வீட்டுத் தோட்டக்கழிவுகள் | ஒரு லாரி அளவுக்கு | 1000.00 |
| 1 | காய்கறி சந்தை | தினசரி கடை – 1க்கு | 50 |
| 2 | ஆடு அறுக்கும் மனை | மாதம் ஒன்றுக்கு | 1000 |
| 3 | சிறுதொழில் கூடம் | லாரி ஒன்றுக்கு | 1000 |

மேற்காணும் துணை விதிகளை மீறுபவர்கள் மீது தமிழ்நாடு 1920 நகராட்சிகள் சட்டம் பிரிவுகளின் கீழ் சட்டப்படியான நடவடிக்கை தொடரப்படும். மேலும் 1999 ஆம் ஆண்டு மத்திய அரசின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டம் பிரிவு 15–ன் படி குழித்துறை நகராட்சியின் சுற்றுச் சூழலுக்கு எதிரானதாக செயல்பட்டதாக கருதி உரிய நடவடிக்கை தொடரப்படும்.
துணை விதிகளின் குறிப்பிட்டுள்ள செய்யக்கூடாத செயலை செய்யும் நபருக்கு தண்டனையாக ரூ.1000 அபராதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

தொடர் குற்றநகளுக்கு கூடுதலாக தினசரி ரூ.100/–வீதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

மேலும் விதிகளில் கூறப்பட்டுள்ள நிர்வாக கட்டணஙகளை விதித்தல், வசூல் செய்தல், அபராதக் கட்டணஙகளை வசூல் செய்தல் மற்றும் அவற்றின் தொடர் நடவடிக்கை ஆகியவற்றிற்கு, நகராட்சியின் ஆணையாளருக்கு நகர்மன்றத்தால் அதிகாரம் வழஙகப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 2833,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 23

குழித்துறை நகராட்சி அலுவலக பொறியாளர் அறையிலுள்ள Aircondition-ல் Control board பழுதடைந்த காரணத்தால் மேற்படி பழுதினை சரி செய்ய 17–02–2017 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளி விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளித் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | Pothikai Air condition Engineers and works, Padanthalumoodu | 4200 |
| 2 | National Refrigiration, Service Engineers works, Pammam, Marthandam | 4100 |
| 3 | General Refrigeration Service, Marthandam | 4000 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.3–ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள General Refrigeration Service, Marthandam நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் தீர்மானிக்கிறது.

**<u>நகர்மன்றத் தீர்மான எண். 2834,</u>**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 24</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டத்தில் நவீன மீன்சந்தை அமைக்கும் பணிக்கு தொழில் நுட்ப ஆலோசகர் நியமனம் செய்வதற்கு 14–02–2017 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| | |
|---|---|
| 1) Design Spectrum<br>No.42, Labour School Street<br>Anakaputhur Chennai | 1.72% குறைவு<br>(ரூ.221880/–) |
| 2) Pavithra Associates<br>Civil Engineer and congtractor<br>Medavakkam Main road | 1.58% குறைவு<br>(ரூ.203820/– ) |
| 3) Prorata in propotion<br>B/4-2 Ganeshvilas,<br>Ramapuram, Chennai | 1.64% குறைவு<br>(ரூ.211560/–) |

**4)** வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.58% குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள Pavithra Associates–ன் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் தீர்மானிக்கிறது.

**<u>நகர்மன்றத் தீர்மான எண். 2835,</u>**

**அனுமதிக்கப்பட்டது**

ஒப்பம்/–
தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர் பொறுப்பு,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்(பொ),
குழித்துறை நகராட்சி.